28-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 24 Aug 2012 09:05:23 AM IST

திருவள்ளூர், ஆக. 23: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் செவ்வாய்க்கிழமை (28-ம் தேதி) நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெறும்.

மாவட்ட ஆட்சியர் ஆசிஷ்சாட்டர்ஜி கூட்டத்திற்கு தலைமை வகிக்கிறார். வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், கூட்டுறவு, கால்நடை, பொதுப்பணித்துறை, மீன்வளம், வேளாண் பொறியியல் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கூட்டத்தில் பங்கேற்று விவசாயிகளின் குறைகளுக்கு பதில் அளிக்கின்றனர். எனவே விவசாயிகள் இக்கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என ஆட்சியர் சாட்டர்ஜி தெரிவித்துள்ளார்.

மானியத்தில் விதைகள், நுண்ணுரங்கள்

First Published : 23 Aug 2012 10:55:59 AM IST

திண்டுக்கல், ஆக. 22: ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் இந்தாண்டு தேசிய உணவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சான்று பெற்ற பயறு வகை விதைகள் மற்றும் நுண்ணுரங்கள் 50 சத மானியத்தில் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளதாக வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் தெரிவித்துள்ளார். வேளாண் விரிவாக்க மையத்தில் போதிய பயறு வகை விதை, நுண்ணுரம் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலரை அணுகி மானியத்தில் விதை, நுண்ணுரங்களைப் பெற்று பயனடையலாம் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பசுந்தாள் உர விதைகளுக்கு மானியம்

First Published : 23 Aug 2012 02:50:28 PM IST

திருச்செங்கோடு, ஆக. 22: எலச்சிபாளையம் வட்டாரத்தில் மண் வளத்தைக் காத்து மகசூலை அதிகரிக்கும் பசுந்தாள் உர விதைகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து எலச்சிபாளையம் வேளாண் உதவி இயக்குநர் முரளீதரன் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மண் வளத்தை அதிகரிக்க பசுந்தாள் உரம் விதைத்து பூக்கும் தருணத்தில் மடக்கி உழுவது மிகவும் இன்றியமையாதது. பசுந்தாள் உரம் தழைச் சத்தை மண்ணில் நிலை நிறுத்தும் தன்மை கொண்டது. மேலும் மணி, சாம்பல் சத்துகளையும் சிறிதளவு அளிக்க வல்லது. பசுந்தாள் உரமான தக்கைப் பூண்டை களர், உவர் நிலங்களில் பயிரிடுவதால் மண்ணின் களர் தன்மை குறைந்து அதன் தரமும் உயர்கிறது.

பல பருவங்களுக்கிடையில் ஒரு பருவத்தில் தக்கைப் பூண்டினை பயிரிட்டால் அதனைத் தொடர்ந்து பயிரிடப்படும் பயிர்களுக்கு தழைச்சத்து மற்றும் பிற சத்துகளையும் அளிப்பதால் பயிரின் வளர்ச்சி அதிகரிக்கிறது. மேலும், பசுந்தாள் உரம் அதிகளவு நார்ச் சத்து கொண்டுள்ளதால் மண்ணின் தன்மையை மாற்றுவதோடு மண்ணின் தரத்தையும் சீராக வைக்க உதவுகிறது.

நிகழாண்டில் எலச்சிபாளையம் வட்டாரத்தில் 40 விவசாயிகளுக்கு தக்கைப் பூண்டு விதைகள் மானியத்தில் வழங்க வேளாண் துறை திட்டமிட்டுள்ளது. வேளாண் துறை மூலம் தக்கைப் பூண்டு விதைகள பெற்று ஒரு எக்கரில் விதைத்தால் 50 சத மானியமாக ரூ 1,250-ம் விதைத்த 45-ம் நாள் பூக்கும் தருணத்தில் மடக்கி உழுவதற்கு சுழல் கலப்பை வாடகைக்கு அதிக பட்சமாக ரூ. 500 மானியமாக வழங்கப்படும்.

இது பற்றிய விபரம் தேவைப்படுவோர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு பெயர்களைப் பதிவு
செய்து கொள்ளலாம் என்றார் முரளீதரன்.

## உர விற்பனையை கண்காணிக்க குழு அமைப்பு

First Published : 23 Aug 2012 12:50:42 PM IST

பெரம்பலூர், ஆக. 22: பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா (ரபி) பருவத்தில் உர விற்பனையை கண்காணிக்க குழு அமைக்கப்பட்டுள்ளது என்றார் வேளாண்மை இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நடப்பு சம்பா (ரபி) பருவத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் உர விற்பனையை கண்காணிக்கும் வகையில் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் உர விற்பனை கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, மொத்த மற்றும் சில்லறை உர விற்பனையாளர்கள், உர விற்பனை செய்வதற்குரிய ரசீது தர மறுத்தாலோ, விலைப் பட்டியல் பராமரிக்காமல் இருந்தாலோ அல்லது அரசு நிர்ணயித்துள்ள (உர சாக்குகள் மீது உள்ள உர விலை) விலைக்கு மேல் விற்பனை செய்தாலோ, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை இயங்கி வரும் உர கண்காணிப்புக் குழுவை 04328-225773 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு புகார் தெரிவிக்கலாம்.

எனவே, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள உர விற்பனையாளர்கள் தாங்கள் விற்பனை செய்யும் உரத்துக்கு கட்டாயம் ரசீது வழங்க வேண்டும். அரசு நிர்ணயித்துள்ள உர விலைக்கு மேல் விற்பனை செய்தால் தங்கள் மீது உரக்கட்டுப் பாட்டுச் சட்டம் (1985-ன் படி) கடுமையான மேல் நடவடிக்கை தொடரப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 76.85 அடி

First Published : 23 Aug 2012 12:59:42 PM IST

தஞ்சாவூர், ஆக. 22: மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 76.85 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 886 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 2,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

ஆகஸ்ட் 24,2012,01:30

## ரசாயன கலப்பு இல்லாத...இயற்கை உணவு பொருட்கள் சந்தை ரூ.1,000 கோடியாக உயர்வு




புதுடில்லி:இந்தியாவில், ரசாயன கலப்பற்ற இயற்கை உரங்கள் மூலம் விளைவிக்கப்படும் உணவு வகைகளின் சந்தை, ஆண்டுக்கு 20 சதவீதத்திற்கும் அதிகமாக வளர்ச்சி கண்டு வருகிறது. ஏற்றுமதியை உள்ளடக்கிய இச்சந்தை மதிப்பு, தற்போது 1,000 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. விழிப்புணர்வு:இதற்கு,நடுத்தர வர்க்கத்தினரின் செலவிடும் வருவாய் அதிகரித்து வருவதும், ரசாயன கலப்பற்ற உணவு வகைகள் குறித்த விழிப்புணர்வு பெருகி வருவதும் முக்கிய காரணங்களாகும்.இவ்வகை உணவுச் சந்தை குறித்து யெஸ் பேங்க் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை விவரம்:கடந்த 2010ம் ஆண்டு நிலவரப்படி, ரசாயன கலப்பற்ற உணவுகள் மற்றும் குளிர்பானங்களின் சர்வதேச சந்தை மதிப்பு, 5,720 கோடி டாலராக இருந்தது.

இது, ஆண்டுக்கு 16.2 சதவீத வளர்ச்சியின் அடிப்படையில், வரும் 2015ம் ஆண்டு 10,450 கோடி டாலராக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.ஐரோப்பிய நாடுகள்:மதிப்பீட்டு ஆண்டில், ரசாயன கலப்பற்ற உணவு வகைகளுக்கான சர்வதேச சந்தையில், ஐரோப்பிய நாடுகள் 2,780 கோடி டாலர் பங்களிப்புடன் முதலிடத்தை பிடித்திருந்தன. ஆசிய, பசிபிக் நாடுகளின் பங்களிப்பு, 350 கோடி டாலராக இருந்தது. இந்நாடுகள், இச்சந்தையில், 2006-10ம் ஆண்டு வரை, ஆண்டுக்கு சராசரியாக, 16.2 சதவீத வளர்ச்சியை கண்டு வந்துள்ளன.

இந்தியாவை பொறுத்தவரை, தற்போது, ஏற்றுமதியை உள்ளடக்கிய, ரசாயன கலப்பற்ற, இயற்கை உணவு வகைகளின் சந்தை, 1,000 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. நம்நாடு, ஆண்டுக்கு 39 லட்சம் டன் அளவிற்கு, அங்கீகரிக்கப்பட்ட ரசாயன கலப்பற்ற இயற்கை உரங்கள் மூலம் விளைவிக்கப்படும், விளைபொருட்களை உற்பத்தி செய்கிறது. இவற்றில், பாசுமதி அரிசி, பருப்பு வகைகள், தேயிலை, காபி, நறுமணப் பொருட்கள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்டவை அடங்கும்.ரசாயன கலப்பற்ற உணவுத் தொழில், பெருநகரங்களை சார்ந்தே உள்ளது.

சென்னை, மும்பை, பெங்களூரு உள்ளிட்ட, 10 பெருநகரங்களில், மிக அதிகளவில் இயற்கை உணவு வகைகள் கிடைக்கின்றன.மத்திய அரசின் புள்ளி விவரப்படி, நாட்டில், 11 லட்சம் ஹெக்டேரில், இயற்கை உரங்கள் வாயிலான விவசாயம் நடைபெறுகிறது. இது தவிர, 34 லட்சம் ஹெக்டேர் அளவிலான வனப் பகுதிகளிலும், இவ்வகை உணவுப் பொருட்கள் சாகுபடி

செய்யப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பருத்தி:இயற்கை வேளாண்மையில், மத்திய பிரதேசம் 4.40 லட்சம் ஹெக்டேருடன் முதலிடத்தில் உள்ளது. அடுத்த இடங்களில் மகாராஷ்டிரா (1.50 லட்சம் ஹெக்டேர்), ஒடிசா (95 ஆயிரம் ஹெக்டேர்) உள்ளன.இந்தியாவில் இயற்கை வேளாண் சாகுபடி பரப்பில், பருத்தி 40 சதவீத பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ளது. சர்வதேச அளவில், இவ்வகையான பருத்தி உற்பத்தியில், இந்தியாவின் பங்களிப்பு 50 சதவீதம் என்ற அளவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**நிலக்கடலை விதைப்பண்ணை தொழில் நுட்பங்கள் குறித்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2012,05:06 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் நிலக்கடலை விதைப்பண்ணைகளில் நிலக்கடலை பயிர் தற்போது, பூ பூக்கும் தருவாயில் உள்ளது. இந்த நேரத்தில் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து, விவசாயிகளுக்கு விதை சான்று அலுவலர் வெங்கடேசன் அறிவுரை வழங்கியுள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில் தற்போது, பெய்த மழையை பயன்படுத்தி நிலக்கடலை விதை பண்Øணை காரீப் பருவத்தில், இது வரை, 140 ஹெக்டேரில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது, நிலக்கடலை பயிர் வளர்ச்சி பருவத்தில் பூக்கள் பூக்கும் தருணத்தில் உள்ளது.இந்நேரத்தில் விதைப்பண்ணை பயிர்களில் களை எடுத்து நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். சுருள்பூச்சி மற்றும் டிக்கா இலைப்புள்ளி தாக்குதலை தவிர்க்க, உயிர் பயிர் பாதுகாப்பு நடடிக்கையாக உரிய மருந்தான, "பாசலோன்' ஊடுருவி பாயும் மருந்தை ஒரு லிட்டருக்கு, இரண்டு மில்லி மற்றும் டைத்தேன் எம் 45 பூஞ்சான மருந்து 3 கிராமம் ஒரு லிட்டருக்கு என்ற அளவில், 200 லிட்டருக்கு தேவையான மருந்தை வாங்கி கைத்தெளிப்பான் மூலம் செடிகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.மேலும், 45வது நாளில் ஜிப்சம் 80 கிலோ ஏக்கருக்கு என்ற அளவில் செடிகளின் மேல் படாமல் மண் பகுதியில் இட்டு செடிகளை சுற்றி நன்கு மண் அணைக்க வேண்டும். அடியுரமாக நுண்சத்து இடாமல் இருந்தால், நிலக்கடலை நுண்சத்து, இரண்டு கிலோ ஏக்கருக்கு என்ற அளவில், 10 லிட்டர் தண்ணீரில் ஊற வைத்து பின் வடிகட்டி கிடைக்கும் தெளிந்த கரைசலை, 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் செடிகள் நனையும்படி தெளிக்க வேண்டும்.விழுதுகள் நன்கு இறங்கி பிஞ்சுகாய்கள், காய்கள் உருவாகிய தருணத்தில் மேலுரமாக பொட்டாஷ் உரத்தை ஏக்கருக்கு, 50 கிலோ என்ற அளவில் மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடவும். இந்த தொழில் நுட்பங்களை விதைப்பணணை அமைத்த வயல்களில் பயன்படுத்தினால், நல்ல திடமான அதிக எடை உள்ள காய்கள் உருவாகி அதிக மகசூல் பெற்று நல்ல தரமான விதை உற்பத்தி செய்து வருவாய் பெருக வாய்ப்பு

கிடைக்கும்.வரும் நிதியாண்டில் (2013), 238 ஹெக்டேர் விதைப்பண்ணை அமைத்து, 158 மெட்ரிக் டன் சான்று பெற்ற வதைகள் கொள்முதல் செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. எனவே விதைப்பண்ணை அமைத்த விவசாயிகள் இந்த தொழில் நுட்பங்களை பயன்படுத்தி பயன்பெறலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## முட்டை விலை 331 காசாக உயர்வு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2012,04:05 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 331 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, வரலாறு காணாத அளவில் ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில், பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 325 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஆறு காசுகள் உயர்த்தி, 331 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.இது, அதிகபட்ச விலை என்பதால், பண்ணையாளர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. "கோழித்தீவன மூலப்பொருட்கள் விலையேற்றத்தால், முட்டை உற்பத்தி செலவும் அதிகரித்துள்ளது.அதன் எதிரொலியாக முட்டை விலை ஏற்றம் கண்டு வருகிறது.

இந்த விலையேற்றம் தொடரும்' என, பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:சென்னை, 325 காசுகள், பெங்களூரு, 315 காசுகள், மைசூரு, 315 காசுகள், ஹைதராபாத், 292 காசுகள், மும்பை, 322 காசுகள், விஜயவாடா, 295 காசுகள், கோல்கத்தா, 345 காசுகள், பார்வாலா, 315 காசுகள், டில்லி, 323 காசுகள்.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 40 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 68 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**ஆக., 30ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2012,04:38 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: கரூர் மாவட்ட ஆகஸ்ட் மாதத்துக்கான மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 30ம் தேதி காலை 11 மணிக்கு கரூர் கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது.எனவே, கரூர் மாவட்ட விவசாயிகள் அனைவரும் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பங்கேற்கலாம். ஏற்கனவே குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பெறப்பட்ட மனுக்கள் மட்டும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.தகவலை கரூர் மாவட்ட கலெக்டர் ÷ஷாபனா தெரிவித்துள்ளார்.

**வேளாண் பயிர் காப்பீட்டு திட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2012,03:12 IST

கருத்தை பதிவு செய்ய

பழநி:உதவி வேளாண் இயக்குனர் வெள்ளைச்சாமி கூறியதாவது:சிறு,குறு விவசாயிகளுக்கு 55 சதவிகிதமும், மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகிதமும் மானியம் வழங்கப்படுகிறது. பிரிமியத்தில் மானிய தொகை போக மீதமுள்ள தொகையினை விவசாயிகள் செலுத்த வேண்டும்.இரண்டாம் போகம் நெல்: காப்பீடு தொகை ரூ. 21,730 க்கு, 55 சதவிகிதம் மானியம் போக ரூ.196ம், 50 சதவிகிதம் மானியம் போக ரூ.217 பிரிமியம் செலுத்த வேண்டும். கடைசி நாள் 31.12. 2012. மக்காச்சோளம்:காப்பீடு தொகை ரூ. 17,310 க்கு, 55 சதவிகிதம் மானியம் போக ரூ.195ம், 50 சதவிகிதம் மானியம் போக ரூ.216 பிரிமியம் செலுத்த வேண்டும். கடைசி நாள் 30.9. 2012. கரும்பு: காப்பீடு தொகை ரூ. ஒரு லட்சதுது 40 ஆயிரத்துக்கு, 55 சதவிகிதம் மானியம் போக ரூ.1890ம், 50 சதவிகிதம் மானியம் போக ரூ.2100 பிரிமியம் செலுத்த வேண்டும். கடைசி நாள் 31.12.2012.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

---

தினகரன்

கால்நடைகளுக்கு மருத்துவ முகாம்

பதிவு செய்த நேரம்:2012-08-23 10:09:14

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி அடுத்த சின்னநெகமம் ஊராட்சிக்குட்பட்ட உதவிபாளையம் கிராமத்தில் நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் கால்நடை பராமரிப்புதுறை மூலம் கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் இளங்கோவன் தலைமை தாங்கினார். கால்நடை மருத்துவர் ரூபாநந்தினி சிகிச்சை அளித்தார், விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிறப்பாக கன்று வளர்ப்பு செய்த விவசாயிகள் 20க்கும் மேற்பட்டவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டன. முகாம் ஏற்பாடுகளை உழவர் மன்ற அமைப்பாளர் செந்தில் குமா ர், பொருளாளர் மணி சேகர் உள்பட பலர் செய்திருந்தனர்.

தீவன விலையை குறைக்க வலியுறுத்தி தமிழக விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்

பதிவு செய்த நேரம்:2012-08-23 10:14:50

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், உரம் மற்றும் தீவன விலையை குறைக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலை எதிரில் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் உரம் மற்றும் தீவனம் விலையை குறைக்க வலியுறுத்தி கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு தமிழக விவசாயிகள் சங்க மாநில பொது செயலாளர் ராமகவுண்டர் தலைமை வகித்தார். ஒருங்கிணைந்த மாவட்ட பொது செயலாளர் சுந்தரேசன், மாவட்ட தலைவர்கள் வேலு, வண்ணப்பா, மாவட்ட பொருளாளர்கள் சுப்ரமணிரெட்டி, அசோக்குமார், மாவட்ட துணை தலைவர்கள் கோணப்பன், பெருமாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் டாக்டர் சிவசாமி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் தென்மேற்கு பருவமழை பொய்த்துள்ள இந்த தருணத்தில்

விவசாயிகளை நேரடியாக பாதிக்கும் உரம் மற்றும் தீவன விலையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டு கொண்டார்.

மேலும், ஆர்ப்பாட்டத்தில் தென்பெண்ணை ஆற்றுக்கு வரும் தண்ணீரை கர்நாடகா மின் மோட்டார் வைத்து உறிஞ்சுவதால், அணைக்கு நீர்வரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் வெங்கடேசன், கிழக்கு மாவட்ட தலைவர் தேவேந்திரன், ராஜேந்திரன், திருப்பதி, கிருஷ்ணன், மாவட்ட ஆலோசகர் நசீர்அகமத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வேளாண்மை தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுடன் மாணவிகள் கலந்துரையாடல்

பதிவு செய்த நேரம்:2012-08-23 10:15:12

கிருஷ்ணகிரி: கோவை வேளாண்மை பல்கலை கழகத்தில் உயிர்தொழில்நுட்பவியல் இறுதியாண்டு படிக்கும் மாணவிகள் 14 பேர் கிருஷ்ணகிரி அருகேயுள்ள மூங்கில்புதூர் கிராமத்தில் தங்கி வேளாண்மை பயிற்சி பெற்று வருகின்றனர். கடந்த 17ம் தேதி முதல் மூங்கில்புதூர், மலைச்சந்து, மாதேப்பட்டி, சோக்காடு, பெத்ததானப்பள்ளி, சுண்டம்பட்டி, காவேரிப்பட்டணம் ஆகிய கிராமங்களில் கிராம விவசாயிகளை சந்தித்து அவர்கள் சாகுபடி செய்யும் பயிர்கள், அவற்றிற்கு பயன்படுத்தப்படும் உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் பயன்பாடு பற்றி கேட்டறிந்தனர். குறிப்பாக நெல் பயிர் சாகுபடி, செம்மை நெல் சாகுபடி, தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுடன் கல்லூரி மாணவிகள் கலந்துரையாடினர். அப்போது நடவுமுறை, பயிர் இடைவெளி, கோவீடர் களைக்கருவி பயன்படுத்தி களையெடுத்தல், இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தேவையான உரங்களை இடுதல், இயந்திரங்களை பயன்படுத்தி அறுவடை செய்தல், அறுவடைக்கு பின் தானியங்களை உலர வைத்து பயன்படுத்துதல் போன்ற தொழில்நுட்ப உத்திகள் குறித்து கலந்துரையாடினர். துவரையில் புதிய தொழில்நுட்பமான கப் முறையில் நாற்று தயார் செய்து பசுமை குடிலில் வளர்த்து பருவமழை பெய்யும் தருணத்தில் நடவு செய்தல் குறித்து கூறப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் மகேஸ்வரன் மூலம் சுண்டம்பட்டி கிராமத்தில் மானாவாரி மா மரங்களுக்கு நீர் மேலாண்மை குறித்து அமைத்துள்ள மாதிரி மா பண்ணை, தொழில்நுட்ப பணிகளை பார்வையிட்டனர். இந்த மாதிரி பண்ணை மா விவசாயிகளுக்கு ஒரு மாதிரி பண்ணையாகவும், முன்னுதாரணமாகவும் அமையும் எனவும், இதனால் மாவட்டம் முழுவதும் மா பயிரிட்டுள்ள 1 லட்சம் ஏக்கர் பரப்பு பயனடையும் எனவும் அதிகாரிகள் மாணவிகளுக்கு விளக்கினர்.

கல்லூரி மாணவிகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) பச்சையப்பன் ஒருங்கிணைப்பாளராக இருந்து வழங்கி வருகிறார்.

---